

விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
8 சைவசமய பாடப்பரீட்சை : 2023
தரம் எட்டு



nselva.com

காலம் } 1.30 மணி

புள்ளிகள் : 100

இல.

மாணவர் }

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. (அ) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. பின்வருவனவற்றில் மும்மலங்களில் அடங்காதது எது?
   1) ஆணவம் 2) ஆன்மா 3) கன்மம் 4) மாயை
2. மனித உடலின் அமைப்பிலேயே அமைக்கப்படுகின்ற ஆலயத்தின் நிருத்த மண்டபம் எனும் பகுதி குறிப்பது.
   1) சிரசு 2) மார்பு 3) வயிறு 4) கழுத்து
3. பிரதிபலனை எதிர்பாராது செய்யும் கிரியை எது?
   1) நிஷ்காமிய கிரியை 2) நைமித்திய கிரியை
   3) காமிய கிரியை 4) நித்திய கிரியை
4. இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் காலம் எவ்வாறு அழைக்கப்படும்?
   1) சாயரட்சை காலம் 2) இரண்டாம் காலம்
   3) உச்சிக் காலம் 4) சர்வசங்கார காலம்
5. மாதம் ஒருமுறை நிகழ்வது?
   1) சதுர்த்தி 2) பிரதோஷம் 3) ஆலயத்தின் பிரமோற்சவம் 4) மகாமகம்
6. இலங்கையைச் சிவபூமி என்று அழைத்தவர்
   1) நாவலர் 2) திருமூலர் 3) அகத்தியர் 4) இராவணன்
7. திருத்தோணியப்பர் எழுந்தருளி அருள்பாலிக்கும் திருத்தலம் எது?
   1) சிதம்பரம் 2) சீர்காழி 3) திருமறைக்காடு 4) திருக்கழுமலம்
8. சூரியன் எந்த இராசிக்குள் பிரவேசிக்கும் நாள் புதுவருடப் பிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது?
   1) தனுராசி 2) கும்பராசி 3) மேடராசி 4) சிம்மராசி
9. கண்ணப்ப நாயனாரின் இயற் பெயர் யாது?
   1) நாகன் 2) நாணன் 3) திண்ணன் 4) காடன்
10. ''காப்பதோர் வில்லும் அம்பும்'' என்ற திருப்பதிகத்தைப் பாடியவர் யார்?
    1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
    3) கண்ணப்ப நாயனார் 4) அருச்சுணன்
11. இலங்கையில் காணப்பட்ட புராதன ஈஸ்வரங்களுள் அடங்காதது எது?
    1) திருக்கோணேஸ்வரம் 2) சந்திரசேகர ஈஸ்வரம்
    3) முன்னேஸ்வரம் 4) பொன்னம்பலவாணேஸ்வரம்
12. சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து முருகன் தோன்றிய தினம் எது?
    1) பங்குனி உத்தரம் 2) மார்கழித் திருவாதிரை
    3) ஆனி உத்தரம் 4) வைகாசி விசாகம்

13. பிரம்மஹஸ்தி தோஷத்தை நீக்க இராமன் வழிபட்ட ஆலயம் எது?

1) உகந்தை முருகன் ஆலயம் 2) வல்லிபுர ஆழ்வார் ஆலயம்

3) முன்னேஸ்வரம் 4) திருக்கோணேஸ்வரம்

14. 1ம் கஜபாகு மன்னனால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட வழிபாட்டிற்குரியவர்.

1) சீதை 2) அனுமான் 3) கண்ணகி 4) புத்தர்

15. வல்லிபுர ஆழ்வார் திருத்தலத்தில் புரட்டாதி மாத அமாவாசை தொடக்கம் மகோற்சவம் வரை எத்தனை தினங்கள் நடைபெறும்?

1) 15 2) 25 3) 17 4) 10

16. கதிரமலை காணாத கண் என கதிர்காமக் கந்தனைச் சிறப்பித்துப் பாடியவர் யார்?

1) அருணகிரிநாதர் 2) நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

3) ஔவையார் 4) குமரகுருபரர்

17. உபாசனா காண்டம் (வழிபாட்டிற்குரிய பகுதி) வேதங்களின் எப்பிரிவில் அடங்கும்?

1) ஆரணியகங்கள் 2) சங்கிதைகள் 3) உபநிடதங்கள் 4) பிராமணங்கள்

18. ''நீள நினைந்தடியேன்.....'' என்ற தேவாரத்தின் பண் யாது?

1) நட்டராகம் 2) கொல்லிக் கௌவாணம் 3) கொல்லி 4) குறிஞ்சி

19. சிவனடியார்கள் பற்றிப் பாடப் பெற்ற முதல் நூல் எது?

1) திருவந்தாதி 2) பெரியபுராணம்

3) திருத்தொண்டர்தொகை 4) பஞ்சபுராணங்கள்

20. கொடி இறக்கத்தின் போது பூசணிக்காய் பலியிடுதலை முக்கியமான நிகழ்வாகக் கொண்ட ஆலயம் எது?

1) சித்தாண்டி முருகன் 2) மானிப்பாய் மருதடி விநாயகர்

3) கொத்துக்குளம் முத்துமாரியம்மன் 4) செல்வச்சந்நிதி

21. ''எடுத்தவன் தருக்கை இழித்தவர்.....'' என்ற தேவாரத்தில் சம்பந்தரால் கூறப்பட்ட இதிகாசக் கதை யாது?

1) பாண்டவர் சூதாடி நாடு நகர் இழந்தமையை மீளப்பெற்றமை.

2) இராவணனது கர்வத்தை அடக்கியமை.

3) நளன் தமயந்தி திருமணத்திற்கு உதவியமை.

4) கண்ணகியின் கற்பின் சிறப்பை உலகறியச் செய்தமை.

22. சைவப் பெரியார் சிவபாத சுந்தரனாருக்கு முன்னோடியாக விளங்கியவர்-

1) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை 2) விபுலானந்த அடிகள்

3) புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை 4) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

23. பங்குனி உத்தரத்தின் சிறப்புக்களில் ஒன்று -

1) இறைவன் இறைவியைத் திருமணம் செய்தது.

2) முருகப் பெருமான் தாமரை மலர்களில் தோன்றியது.

3) விநாயகர் காவேரி நதியை விடுவித்தமை.

4) மகாவிஷ்ணு மூவடி மண் கேட்டு தேவர்களைக் காத்தமை.

24ம், 25ம் வினாக்களுக்குப் பொருத்தமான இணைப்புக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.

அ. கதிர்காமம் உ. மகாபாரத சம்பவங்கள்

ஆ. வல்லிபுரஆழ்வார் ஊ. கப்புறாளை

இ. முன்னேஸ்வரம் எ. அழகேஸ்வரம்

ஈ. ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம் ஏ. சமுத்திர தீர்த்தம்

24. மொனராகலை மாவட்டத்தில் அமைந்த ஆலயத்தின் சரியான இணைப்பு -

1) அ, ஊ 2) இ, ஏ 3) ஈ, உ 4) ஆ, எ

25. மாயவனாறு (தெதுறுஓயா)வை தீர்த்தமாக கொண்ட ஆலயத்தின் இணைப்பு -

1) ஈ, ஏ 2) அ, ஊ 3) ஆ, உ 4) இ, எ

(25 x 1=25 புள்ளிகள்**)**

(ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. தூலலிங்கம் எனப்படுவது எது?
2. கடவுளின் உண்மைத் தன்மை பற்றிக் கூறும் இரண்டு நூல்கள் தருக?
3. சைவ சமயிகள் நியமமாகச் செபிக்க வேண்டிய சிவமூலமந்திரம் யாது?
4. தமிழ் வேதம் ஓதுவதற்கு யோக்கியர் யார்?
5. நாள் மங்கலம் என்றால் என்ன? நாள் என்பது எதனைக் குறிக்கிறது?
6. சைவப் பெரியார் சிவபாத சுந்தரனாரின் தந்தை பெயர் யாது?
7. கன்னியா வெந்நீரூற்றை அமைத்தவர் யார்?
8. கோவில் என்று சிறப்பித்துக் கூறப்படும் தலம் எது?
9. திருமருகலில் இறைவன் எப்பெயரோடு வீற்றிருந்து அருள்பாலிக்கிறார்?
10. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தின் தலவிருட்சம் எது?
11. இறைவன் தில்லையிலே திருநடனம் புரிந்த நாள் எது?
12. 63 நாயன்மாருக்கு நடைபெறும் உற்சவம் எவ்வாறு அழைக்கப்படும்?
13. இலங்கையில் பங்குனி உத்தரம் சிறப்பாகக் கொண்டாடப்படும் இரு தலங்களின் பெயர்களைத் தருக?
14. ஆலயங்களில் மின்காந்த அலைகளை ஈர்ப்பதற்காக அமைக்கப்படுவது எது?
15. எல்லாளனைப் போரில் வென்ற துட்டகைமுனு எத்தலத்தில் தனது நேர்த்திக்கடனை நிறைவேற்றினான்?

(15x1=15 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் தொடக்கத்தையுடைய திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டினைப் பிழையின்றி எழுதுக. பாடியவரின் பெயர், பாடப்பட்ட தலம் என்பனவற்றையும் எழுதுக.

1. “கற்றாங்கரியோம்பிக் .....”
2. “பெருகலாம் தவம் .....”
3. “தில்லைவாழ் அந்தணர் தம் .....”
4. “மண்ணில் நல்லவண்ணம் .....”

(2x5 = 10 புள்ளிகள்**)**

2. பின்வரும் தொடக்கத்தையுடைய குறட்பாக்களை பூரணமாக எழுதுக.

1. “நயன் ஈன்று .....”
2. “சிறுமையுள் நீங்கிய .....”
3. “தினைத்துணை நன்றி .....”
4. “எழுமையும் எழுபிறப்பும் .....”
5. “தகுதி என ஒன்று .....”

(5x1 = 5 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. அ. 1. கடவுளின் தன்மைகள் மூன்று தருக.

2. பஞ்சாங்க நமஸ்காரத்தில் நிலத்தில் பொருந்தும் ஏதாவது மூன்று அங்கங்களைக் குறிப்பிடுக.

3. ஆறுகாலப் பூசைகளையும் குறிப்பிடுக.

(3 x 3 = 9 புள்ளிகள்)

2. 1. சிவராத்திரி என்றால் என்ன?

2. சிவராத்திரி பற்றி கூறும் புராண நூல்கள் 3 தருக.

3. சிவராத்திரி தினத்தை அனுஷ்டிக்கும் முறையைத் தருக.

(2 + 3 + 4 = 9 புள்ளிகள்)

3. 1. பண்டிகைகளைக் கொண்டாடுவதால் உண்டாகும் நன்மைகள் 3 தருக.

2. சித்திரை மாதம் கொண்டாடப்படும் பண்டிகையன்று வீட்டில் நிகழும் பாரம்பரியங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

3. மருத்து நீர் தயாரிக்கப்படும் முறையை விளக்குக.

(3 x 3 = 9 புள்ளிகள்)

4. 1. விரதம் என்றால் என்ன?

2. விரதம் அனுஷ்டிப்பதால் ஏற்படும் இரண்டு பயன்களைத் தருக.

3. பஞ்ச கிருத்தியங்கள் எவை?

(2 + 2 + 5 = 9 புள்ளிகள்)

5. 1. இலங்கையில் சைவசமயத் தொன்மையையும் வழிபாடுகளையும் கூறும் மூன்று காப்பிய நூல்களைத் தருக. அதில் ஓர் ஆதாரம் தருக.

2. தட்சண கைலாய புராணத்தில் முன்னேஸ்வரத்தை வழிபட்டவர்கள் எனக் குறிப்பிடப்படும் இருவரின் பெயர்களைத் தருக.

3. யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளின் முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள 2 விடயங்களைத் தருக.

(3 + 2) + 2 + 2 = 9 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எதேனும் மூன்றிற்குச் சிறு குறிப்பெழுதுக.

1. நகுலேஸ்வரம்
2. நாட்டார் வழிபாடு
3. இலங்கையில் சைவம்
4. சிவராத்திரி
5. திருஞானசம்பந்தர்
6. நாள் மங்கலம்

(3 x 3 = 9 புள்ளிகள்)